

ஆசிரியரிடமிருந்து........!

# தேவனுடைய கரம் என் மேல் நன்மையாக இருக்கிறது

நெகேமியா 2 : 18

கிறிஸ்துவுக்குள் பிரியமான பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு 2020 ஆண்டு புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்! கர்த்தர் உங்கள் ஒவ்வொருவரையும் தம்முடைய கரத்தினால் ஆசீர்வதித்து வழிநடத்துவாராக!

'தேவனுடைய கரம்' மகா உன்னதமான ஆசீர்வாதங்களையும் நன்மைகளையும் நமக்கு அளவில்லாமல் அள்ளித் தருகிறது. அவரது கரம் தரும் நன்மைகளை வேதம் முழுவதிலும் நாம் காண முடியும். தேவனுடைய கரம் என்பது நம்முடைய தேவனின் வல்லமை, ஆளுமை, அதிகாரம், பிரசன்னம் ஆகியவற்றை குறிக்கிறது. வேதம் முழுவதிலும் 'கர்த்தருடைய கரம்' என்ற பதம் 39 இடங்களிலும், 'தேவனுடைய கரம்' என்கிற பதம் 16 இடங்களிலும் வருகிறது. இந்த இடங்களில் தேவனுடைய கரம் இரண்டு விதங்களில் வெளிப்படுவதை நாம் காண முடியும். ஒன்று, தேவ ஜனங்களை ஆசீர்வதிக்க தேவ கரம் நீட்டப்படுகிறது. இரண்டாவதாக, எதிரிகளை முறியடிக்கவும், அவர்களுக்கு நியாயத்தீர்ப்பு கொடுக்கவும் வெளிப்படுகிறது. தேவ ஜனங்களாகிய நாம் இந்த 2020 ஆண்டு கர்த்தருடைய வழிகளில் நடக்கவும், அவரை நேசிக்கவும், தேடவும் தீர்மானிக்கும்போது நெகேமியா கூறுவது போல, தேவனுடைய கரம் நம்மேல் நன்மையாக காணப்படும்!

## விடுவிக்கும் கரம்

தேவனுடைய கரம், கை, புயங்கள் என்கிற பதங்களை முதலாவது யாத்திராகமத்தின் புத்தகத்தில் நாம் அதிகமாக காண்கிறோம். இஸ்ரவேல் புத்திரர் எகிப்தின் அடிமைத்தனத்தினால் தவித்துக் கொண்டிருக்கும்போது தேவனை நோக்கி முறையிட்டார்கள் (யாத்.2:23-25). அப்பொழுது தேவன் அவர்களை தம்முடைய வல்லமையான கரத்தினாலும் ஓங்கிய புயத்தினாலும் விடுவித்தார் (யாத்.6:6; உபா.5:15). எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் ஜனங்களை விடுவிக்க ஆரம்பத்தில் மறுத்தான். ஆனால் கர்த்தருடைய கரம் எகிப்தியர் மேல் செய்த தண்டனைகள், வாதைகள், இஸ்ரவேலருக்கு செய்த அற்புதங்களை அவன் கண்டபோது, அவர்களை விடுதலையாக்க அனுமதித்தான் (யாத்.3:19, 20; 9: 2, 3; 13:3; 15:6). ஆம் பிரியமானவர்களே, தேவன் இந்த ஆண்டு தம்முடைய கரத்தின்

வல்லமையில் உங்களை சகல கட்டுகள் மற்றும் அடிமைத்தனத்தி னின்றும் விடுவிப்பார். மேலும் இரட்சிக்கப்படாத உங்கள் குடும்பத்தினரையும் விடுவித்து இரட்சிப்பார்! இரட்சிக்கக்கூடாதபடிக்கு அவருடைய கரம் குறுகிப் போகவும் இல்லை (ஏசாயா 59:1).

## தேவைகளை சந்திக்கும் கரம்

தேவனுடைய கரம் தரும் நன்மைகளைக் குறித்து இரண்டாவதாக எஸ்றா, நெகேமியா புத்தகங்களில் வாசிக்கிறோம். தேவனுடைய கரத்தைக் குறித்து ஒன்பது இடங்களில் இந்த இரண்டு புத்தகத்திலும் வாசிக்கிறோம். எஸ்றா சிறையிருப்பிலிருந்து தாயகம் திரும்புகிறார். தேவனுடைய கரம் அவரோடு இருந்ததினால் அவர் கேட்டதையெல்லாம் ராஜா அவருக்கு கொடுத்தார் (எஸ்றா 7:6). மேலும் நெகேமியா எருசலேமிற்கு சென்று இடிந்த அலங்கத்தை கட்ட தீர்மானிக்கும் போது, ராஜா அவருக்கு அனுமதி கொடுத்ததோடு, அவருக்கு தேவையான அனைத்தையும் கொடுக்கக் கட்டளையிட்டார் (நெகே.2:8). கர்த்தருடைய கரம் எந்த மனிதனோடிருக்கிறதோ அந்த மனிதனின் வாழ்வு வித்தியாசமாக இருக்கும். அவனுடைய தேவைகளை கர்த்தர் அற்புதமாக சந்திப்பார். இருப்புத்தாழ்ப்பாள்களை முறித்து வெண்கலக் கதவுகளை உடைத்து ஒளிப்பிடத்திலுள்ள பொக்கிஷங்களையும் மறைவான புதையல்களையும் நமக்கு தருவேன் என்று வாக்குப்பண்ணியிருக்கிறார் (ஏசாயா45:4). எது எங்கு கிடைக்காது என்று நாம் மலைத்து நிற்கிறோமோ, எதை எவர் நமக்குத் தரமாட்டார்கள் என்று திகைத்து நிற்கிறோமோ அதை அந்த இடத்திலிருந்தே பெற்றுத் தர தேவனுடைய கரம் வல்லமையுள்ளது என்பதை மேல் குறிப்பிட்டுள்ள வசனங்கள் நமக்கு காட்டுகின்றன. நம்முடைய தேவைகளை சந்திக்க முடியாதபடி அவருடைய கரம் குறுகிப்போகவில்லை என்று எண்ணாகமம் 11:23 கூறுகிறது. தேவ ஜனமே, கர்த்தர் தம்முடைய கரத்தினால் உங்களை போஷிப்பார், பராமரிப்பார், திருப்தியாக்குவார் (சங். 145:16) ! ஆமென்.

## பாதுகாக்கும் கரம்

“தேவனுடைய கரம் எங்கள் மேலிருந்து, வழியிலே சத்துருவின் கைக்கும், பதிவிருக்கிறவர்களின் கைக்கும் எங்களை தப்புவித்தது” என்று எஸ்றா கூறுகிறார் (எஸ்றா 8:31). எஸ்றா, முதலாம் மாதம் பாபிலோனிலிருந்து புறப்பட்டு ஐந்தாம் மாதத்தில் எருசலேம் வந்து சேருகிறார் (எஸ்றா 7:8; 8:31). ஏறக்குறைய 900 மைல்கள், 150 நாட்கள் பயணத்தில் மனிதர்களால், மிருகஜீவன்களால், சீதோஷன மாற்றங்களால் எத்தனையோ இடர்கள் அவருக்கு ஏற்பட்டிருக்கக்கூடும். ஆனால் தேவனுடைய கரம் அவரோடு இருந்தபடியால் அவர் போய்ச் சேர வேண்டிய இடத்திற்கு தேவனுடைய கரம் அவரை பத்திரமாக கொண்டு போய்ச் சேர்த்தது. ஏசாயா 51:16-ல் ‘என் கரத்தின் நிழலினால் உன்னை மறைக்கிறேன்’ என்று கர்த்தர் கூறுகிறார். கர்த்தருடைய கரம் நம்மேல் இருக்கும்போது வியாதியோ, விபத்துகளோ, விஷப்பூச்சிகளோ, விழுங்கப்பார்க்கும் மனிதர்களோ நம்மை சேதப்படுத்த முடியாது (சங்.91:1-13; 57:3; யோவான் 10:27-29). தேவனுடைய பலத்த கரம் உங்களை எல்லா தீமைக்கும் விலக்கி பாதுகாக்கும் (சங்.121:7,8) மற்றும் வாழ்க்கை பயணத்தில் பத்திரமாக அக்கரைக் கொண்டு சேர்க்கும் (அப். 27:44; யூதா 24)!

## பயன்படுத்தும் கரம்

'கர்த்தருடைய கரம்' என்கிற பதம் மூன்றாவதாக எசேக்கியேல் புத்தகத்தில் அதிகமாக (ஏழு முறை) காணப்படுகிறது. கர்த்தர் நம் ஒவ்வொருவரையும் குறித்து ஒரு உன்னத திட்டத்தையும், நமக்கென்று ஒரு ஊழியத்தையும், பணியையும் வைத்திருக்கிறார். அந்த பணியை நிறைவேற்ற கர்த்தருடைய கரம் நம்மை பலப்படுத்தும், தகுதிபடுத்தும், பயன்படுத்தும்! கர்த்தர் எசேக்கியேலை தீர்க்கதரிசனம் உரைக்கும்படி தெரிந்து கொண்டார். அதை நிறைவேற்ற கர்த்தருடைய கரம் அவர்மேல் அமர்ந்தது என்று வேதம் கூறுகிறது (எசே.1:3; 3:14; 3:22; 8:1; 33:22; 37:1; 40:1). கர்த்தருடைய கரம் எசேக்கியேலை அவர் போக முடியாத இடங்களுக்கு கொண்டு சென்றது. காணமுடியாத காரியங்களை காண செய்தது. ஊழியத்தை நிறைவேற்ற பெலன் தந்தது. எஸ்றா, நெகேமியா போன்ற தேவ மனிதர்களையும் தேவனுடைய கரம் அவர்களைக் கொண்டு நிறைவேற்ற வேண்டிய காரியங்களை சிறப்பாக நிறைவேற்றி முடிக்க பயன்படுத்தியது (எஸ்றா 7:28; நெகே.2:18; 6:15,16). ஆம், கர்த்தர் தம்முடைய கரத்தை உங்கள்மேல் வைத்து இந்த ஆண்டு உங்களைக் கொண்டு செய்ய நினைத்திருக்க அனைத்தையும் செய்து முடிப்பார்! உங்களை ஆச்சரியமாக பயன்படுத்துவார்!.

## திருச்சபையைக் கட்டும் கரம்

இறுதியாக, 'கர்த்தருடைய கரம்' என்கிற பதம் அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் இரண்டு முறை காணப்படுகிறது. 'கர்த்தருடைய கரம் அவர்களோடே இருந்தது. அநேக ஜனங்கள் விசுவாசிகளாகி, கர்த்தரிடத்தில் திரும்பினார்கள்' (அப்.11:21). திருச்சபை உபத்திரவத்தினூடே சென்ற நாட்கள் அது. ஆகிலும் கர்த்தருடைய கரம் விசுவாசிகள்மேல் இருந்தது. அவர்கள் இயேசுவைப் பிரசங்கித்தபோது அநேகர் இரட்சிக்கப்பட்டார்கள். தேவ ராஜ்யம் வேகமாக வளர்ந்தது. அப்போஸ்தலர் 13-ம் அதிகாரத்தில் பவுலின் ஊழியத்தை எதிர்த்து நின்ற எலிமா என்ற மாயவித்தைக்காரனை கர்த்தருடைய கரம் சந்தித்தது. அவன் குருடனாய் மாறி, கைலாகு கொடுக்கிறவர்களைத் தேடினான் (அப்.13:11) . ஆம், இந்த 2020ம் ஆண்டு கர்த்தருடைய கரம் திருச்சபைகளைக் கட்டி எழுப்பும். ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டு சபைகளில் சேருவார்கள். திருச்சபைகளையும், ஊழியங்களையும் எதிர்க்கிறவர்களை கர்த்தர் நிச்சயம் சந்திப்பார். தைரியமாக செயல்படுவோம்!

கடைசியாக சகோதரரே. தேவனுடைய கரம் தம்மைத் தேடுகிறவர்கள் எல்லார்மேலும் அவர்களுக்கு நன்மையாக இருக்கிறதென்று எஸ்றா கூறுகிறார் (எஸ்றா 8:22). ஆகவே இந்த ஆண்டு கர்த்தரை ஜெபத்திலும், வேத வாசிப்பிலும், அவரை ஆராதிப்பதிலும், அவருக்கு ஊழியம் செய்வதிலும் இன்னும் அதிகமாய் தேடுங்கள். கர்த்தருடைய கரம் நிச்சயம் உங்கள்மேல் நன்மையாக இருக்கும் அல்லேலுயா!

**Rev. Dr. ஜெரி டேனியல்**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்)
மூத்த போதகர், சிட்டி ரிவைவல் ஏ.ஜி. சர்ச், திருச்சி